**குளியாப்பிட்டிய பிரதேச சபை**
**குருனாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜூலை 15 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹங்குரன்கெத பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 1,583,800 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் கணக்கிடப்படல் வேண்டும். | சம்மதிக்கிறேன். 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் பொழுது பேரேட்டுக் குறிப்புகள் முலம் சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். |
| (ஆ) | ரூபா. 929,901 பெறுமதியான கடன் கொடுத்தோர் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கணக்கிடப்படாத தொகைகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் பொழுது பேரேட்டுக் குறிப்புகள் முலம் சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். |
| (இ) | ரூபா. 7,845,474 பெறுமதியான நிர்மாணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் பொழுது பிழைகள் | 2019 இன் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | | திருத்தியமைக்கப்படல் வேண்டும். | |
| (ஈ) | 5 நிதித் தலைப்புகளுடன் தொடர்பான கணக்குகள் மற்றும் உபயோக ஆவணங்களுக்கிடையில் ரூபா. 6,964,935 இணக்கமின்மை காணப்பட்டது. | குறித்த இணக்கமின்மைகள் இனங்காணப்பட்டு சரிசெய்யப்படல் வேண்டும். | இவ்விடயம் அட்டவணைப்படுத்தப்பட்டிருந்த போதும் கணக்குகளுக்கான பேரேட்டுக் குறிப்பிடுகையில் கைவிடப்பட்டுள்ளன. அவ் வித்தியாசத்தினை பேரேட்டுக் குறிப்பினூடாக சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 65,184,822 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 70,720,262 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,890,800 | 2,357,687 | 2,570,084 | 501,224 | 1,711,000 | 2,111,000 | 1,931,000 | 658,000 |
| (ii) | வாடகை | 6,451,260 | 8,287,310 | 8,238,179 | 75 | 8,203,000 | 9,795,000 | 1,757,000 | 58,000 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 619,000 | 843,541 | 843,541 | 0 | 514,000 | 642,000 | 642,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 158,190,200 | 174,447,606 | 147,922,921 | 218,695,900 | 138,826,000 | 156,227,000 | 149,192,000 | 156,993,000 |
| | மொத்தம் | 167,151,260 | 185,936,144 | 159,574,725 | 219,197,199 | 149,254,000 | 168,775,000 | 153,522,000 | 157,709,000 |

**2.2.3 வரியும் வீதவரியும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 188,958 ஆகவிருந்த வரி மற்றும் வீதவரி மீதியினுள் 03 வருடங்களுக்கும் மேலாக காணப்பட்டு வருகின்ற ரூபா. 52,331 மீதியும் அடங்கியிருந்தது. | நிலுவை மீதி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | நிலுவை வரியினை அறவிடுவதற்குத் தேவையான எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பபேன். |
| (ஆ) | ஏக்கர் வரி<br>03 வருடங்களுக்கும் மேலான காலம் முதல் இருந்து வருகின்ற ஏக்கர் வரி ரூபா. 267,671 மீதி காணப்பட்டது. | நிலுவை மீதி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | சுபையின் ஆவணங்களில் காணப்படும் ஏக்கர் வரி தொடர்பான விபரங்களுக்கமைய காணி உரிமையாளர்களை இனங்காண முடியாமை மற்றும் காணிகள் குடும்ப அங்கத்தவர்கள் மத்தியில் பிரிந்து செல்லல் ஆகிய காரணங்களினால் ஆவணப்படுத்தப்பட்ட ஏக்கர் வரி வருமானத்தினை அறவிடுவது சிரமமாக உள்ளதென்பதை தெரிவிக்க விரும்புகிறேன். |

**2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா. 31,618,962 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 176,459,926 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பெற வேண்டிய தண்டப்பணத்தினைப் பெற்றுத் தருமாறு கோரப்பட்டுள்ளதுடன் முத்திரைக் கட்டணத் தொகையில் குளியாப்பிட்டிய காணிப் பதிவாளர் காரியாலயத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான முத்திரைக் |

| | | |
|---|---|---|
| | | கட்டணம் தொடர்பான விபரங்கள் இதுவரை எமது சபைக்குக் கிடைக்காததுடன் நிலுவை முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பி விரும்புகிறேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அனுமதிக்கப்பட்ட பணிக்குழுவிற்கு மேலதிகமாக அமைய/ஒப்பந்த அடிப்படையில் 11 ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக ஊழியர்களை இணைத்துக்கொள் ளாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக் கூறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | ஊழியர் கடன் | | |
| | உயிரிழந்த, ஓய்வு பெற்ற மற்றும் சேவையை விட்டு வலகிய 14 ஊழியர்களிடமிருந்து ருபா. 129,560 அறவிடப்பட வேண்டியிருந்தது. | இம் மீதிகள் அறவிடப்படுவதற்கா ன நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்துக் கூறப்பட்டிருக்கவில்லை. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்ட | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை முறையாக | 2018 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் |

| | | |
|---|---|---|
| அதிகாரிகளுக்கான சாதாரண வேலைகளும் வழங்கப்பட்டிருந்ததனால் போதியளவு உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்ள முடியாது போயிருந்தது. | மேற்கொண்டு சபையின் உள்ளக நிருவாகத்தினை முறைப்படுத்துவதற்கும் அறிக்கைப் பிரதிகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அதற்கமைவாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |